1968 ஆகஸ்ட் 26]

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

* 150 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் (**Multipurpose Co-operative Societies**) எண்ணிக்கை என்ன ?

(இ) வாணிபச் சங்கங்களின் (**Marketing Societies**) எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) 8,911 (எட்டாயிரத்து தொள்ளாயிரத்து பதினொன்று).

(இ) 133 (நூற்று முப்பத்தி மூன்று).

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றாக இணைப்பதால் என்ன பயனை அரசு எதிர் பார்க்கிறது ? இந்தக் கொள்கையினை எல்லாச் சங்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள், மல்டி-பர்பஸ் கோவாபரேடிவ் சொஸைட்டீஸ், இவைகளெல்லாம் அங்கேயுள்ள ஜனத்தொகையில் மூவாயிரம் பேருக்காவது பயன்படவேண்டும். இரண்டாயிரம் ஏக்கரா நிலங்களுக்காவது பயன்படவேண்டும். ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்ச ரூபாயாவது கடன் கொடுக்கவேண்டும் ஆண்டொன்றுக்கு நிகர இலாபம் 3,200 ரூபாயாவது வரவேண்டும் என்ற அடிப்படையிலேதான் தோற்றுவிக்கப்படுகின்றன. ஆங்காங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இவற்றை நடத்தி வருகின்றார்கள். இவைகளெல்லாம் 'வயபிள் யூனிட்ஸ்' ஆக இருக்க வேண்டும். அங்கே இருக்கக்கூடிய அங்கத்தினர்களுக்குக் கொடுக்கக் கூடிய பணத்திற்கும், நடைமுறைச் செலவுக்கும் ஒத்துவரக்கூடிய அளவில், 'வயபிள் யூனிட்' உண்டாக்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசாங்கம் முடிவு செய்து, சரியாக நடைபெறாத இரண்டு மூன்று சொஸைட்டிகளையும், 'வயபிள் யூனிட்ஸ்'ஸாக இல்லாத கூட்டுறவு சங்கங்களையும் இணைத்து, 'வயபிள் யூனிட்டாக' நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அது அவர்களுக்கும் நல்லது. நஷ்டம் இல்லாமல் நடப்பதற்கும் உதவியாக இருக்கும்.

Post of Director of Town Planning.

* 151 Q.—THIRU S. **RAMACHANDRAN :** Will the **Hon. the** Minister for Public Health be pleased to state—

(*a*) Whether the present post of Director of Town **Planning** is borne on the I.A.S. Cadre ;

(*b*) if so, from what date ; and

(*c*) whether there is any proposal to appoint a non-I.A.S. technical officer to this post ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) முதல் (உ) வரை இல்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த டவுன் பிளானிங் துறை, பெரும்பாலும் பொறியியல் வல்லுனர்கள் இருந்து பணியாற்றக் கூடிய துறையாகும். அதனுடைய தலைவராக அந்தத் துறையிலேயிருந்து அனுபவம் பெற்ற பொறியியல் வல்லுனரையே போடுவதற்குப் பதிலாக ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டிருப்பதனால் அவருடைய திறமையும் வீணாக்கப்படுகிறது, கீழே இருக்கின்றவர்களுடைய வாய்ப்பும் கெடுகிறது, ஆகவே இதை மறுபரிசீலனை செய்ய சர்க்கார் உத்தேசிக்குமா ?